*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# கலித்தொகையில் விளையாட்டுகள்

**முனைவர் பா. பொன்னி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
தி ஸ்டாண்டர்டு ∴பயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி

## முன்னுரை

விளையாட்டுகள் மனிதனை புத்துணர்வு உடையவனாக மாற்றுவதற்கும் பிறருடன் இணைந்து வாழும் மனப்பான்மை உடையவனாகச் செய்வதற்கும் துணைபுரிவதாக அமைகின்றன. விளையாட்டுகள் மனிதர்களுக்கு மட்டும் உரியதாக அமைவதில்லை. பறவைகளும் விலங்குகளும் விளையாட்டில் ஈடுபடுகின்றன. இதன்வழி விளையாட்டின் முதன்மையை அறிந்து கொள்ள இயலும். சங்ககால மக்கள் உழைப்பிற்கு தந்த முதன்மையை விளையாட்டிற்கும் அளித்துள்ளனர். கலித்தொகை பதிவு செய்துள்ள சங்கத்தமிழர் விளையாட்டுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**விளையாட்டு – சொற்பொருள் விளக்கம்**

விளையாட்டு என்ற சொல்லில் விழை என்பதன் பொருள் விருப்பம் ஆகும். விழை திரிந்து விளை ஆயிற்று என்பர். விருப்பமுடன் ஆடும் விளையாட்டு விளையாட்டு என்று வழங்கப்பட்டது. விளையாட்டில் பொழுதுபோக்கு என்ற நிலை பொதுவான கருத்தாகும். குறிப்பாக, பங்கு கொண்டு பொழுது போக்குவதனை விளையாட்டின் இயல்பு எனலாம். ஓய்வு வேளையில் மன மகிழ்ச்சி செய்யக் கூடிய எளிய அல்லது வேடிக்கையான செயல்களை விளையாட்டு எனலாம் என்பர்.

விளையாட்டு என்ற சொல்லுக்குப் பல்வேறு அகராதிகளும் பல்வேறு பொருள்களைத் தந்துள்ளன. சென்னைப் பல்கலைக்கழக அகராதி "பொழுது போக்கிற்குரிய மகிழ்ச்சி செயல், சிரமமின்றி இலேசாகச் செய்யும் செயல், வேடிக்கை, காமலீலை, கடவுளின் ஆட்டம் போட்டி விளையாட்டு, வன்மை விளையாட்டு, இன்பம், பொழுதுபோக்கு" எனப்பொருள் தருகிறது.

தற்காலத் தமிழ் அகராதி "சிறுவர் பெரியோர் மகிழ்ச்சியுடன் ஈடுபடுதல், விளையாட்டாவது பொழுது போக்கிற்காகவும் திமையை வெளிப்படுத்தவும் ஆடும் ஆட்டம், வேடிக்கையாகச் செய்யப்படுதல்" என்ற பொருளைத் தருகிறது.

"விளையாட்டு என்ற சொல் எதையாவது நோக்கிப் பொழுது போக்கிற்காகத் தன்னுடைய உடம்பை நடவடிக்கைக்கு உட்படுத்துவதைக் குறிக்கும்" என்று தமிழ் இலக்கியக் களஞ்சியம் விளக்கம் அளிக்கிறது.

இதன்வழி விளையாட்டு என்பதன் அடிப்படையாக ஓய்வு நேரத்தில் மேற்கொள்ளக் கூடியது என்பதையும், மனமகிழ்ச்சி அளிக்கும் செயல்களில் முதன்மையானது என்பதையும் அறிந்து கொள்ள இயலுகிறது.

**தொல்காப்பியம் சுட்டும் விளையாட்டு :**

தொல்காப்பியர் உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய நான்கு வகை களன்களில் ஒன்றாக

விளையாட்டையும் குறிப்பிடுகிறார்.

செல்வம் புலன் புணர்வு விளையாட்டென்று

அல்லல் நீத்த உவகை நான்கே ( தொல்காப்பியம் - நூ.1205 )

என தொல்காப்பியர் உவகை தோன்றும் நிலைக்களன்களுள் ஒன்றாக விளையாட்டினைக் குறிப்பிடுகிறார். மேலும் விளையாட்டைக் குறிக்கும் பண்ணை என்ற சொல்லையும் அவர் பயன்படுத்தியுள்ளார்.

பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப
( தொல்.மெய்ப்பாட்டியல் - நூ.1 )

இந்நூற்பாவில் சுட்டப்பட்டுள்ள பண்ணை என்பது விளையாட்டு.இ்.து ஆகுபெயராக விளையாடும் ஆயத்தினைக் குறிப்பிடுகிறது.

கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு
( தொல்.உரி – நூ.23 )

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் கெடவரல், பண்ணை ஆகிய இரண்டும் விளையாட்டைக் குறிக்கும் சொற்கள் என்று குறிப்பிடுகிறார்.

**சங்க இலக்கியத்தில் விளையாட்டுகள் :**

சங்க இலக்கியங்களில் மிகுதியான விளையாட்டுகள் பதிவு செய்யப் பெற்றுள்ளன. ஆண்பாலர் விளையாட்டுகள் 10, பெண்பாலர் விளையாட்டுகள் 15, இருபாலர் விளையாட்டுகள் 12 என 37 விளையாட்டுகள் காணப்பெறுகின்றன.அவை அசதியாடல், அம்புலி அழைத்தல், அலவன் ஆட்டல், உலாவல், ஊசல், எண்ணி விளையாடல், எதிரொலி கேட்டல், ஏறுகோள், கண்புதைத்து ஒளித்தாடல், கவண், கழங்கு, குதிரை ஏற்றமும் யானை ஏற்றமும், குரவை, குறும்பு விளையாட்டுகள், காமவிளையாட்டு, சிறுசோறு, சிறுதேர், சிறுபறை, சிற்றில் செய்தல், சுண்ண விளையாட்டு, சூது, செடிகொடிவளர்ப்பு, நீர் விளையாட்டு, பந்து, பறவைகளைக் காணலும் அவற்றின் செயல்களும், போலச் செய்தல், பறவை வளர்ப்பும் விலங்கு வளர்ப்பும், பாவை விளையாட்டு, பிசி தொடி விளையாட்டு, புள் ஓட்டல், மணற்குவியலில் மறைத்தாடல், மலர்கொய்தலும் மாலை தொடுத்தலும், மல், வட்டு, வள்ளை, வில் விளையாட்டு, வேட்டை ஆகியவையாகும்.

**கலித்தொகையில் விளையாட்டுகள் :**

கலித்தொகையில் சங்ககால மக்கள் விளையாடிய பல்வேறு விளையாட்டுகள் பதிவு செய்யப்பெற்றுள்ளன. அவ்விளையாட்டுகளை ஆடவர் விளையாட்டுகள், மகளிர் விளையாட்டுகள், இருபாலர் விளையாட்டுகள் என்ற அடிப்படையில் பகுத்து ஆராய இயலுகின்றது.

**ஆடவர் விளையாட்டுகள் :**

சங்ககால ஆடவர் போர்த்தொழிலில் சிறப்பு பெற்று இருந்தனர். தம்முடைய ஓய்வு நேரங்களிலும் வீரத்தை வெளிக்காட்டும் விதமாகவே அவர்கள் விளையாட்டுகளை மேற்கொண்டனர்.ஏறு தழுவல், குதிரை ஏற்றம், யானை ஏற்றம், குறும்பு விளையாட்டுகள், சிறுதேர், சிறுபறை, மல், வில்,வட்டு, வேட்டை, கவண் போன்ற விளையாட்டுகளை விளையாடியுள்ளனர்.

**ஏறுதழுவல் :**

ஏறுதழுவுதல் தமிழரின் வீரவிளையாட்டாகும்.கலித்தொகையில் முல்லைக் கலியில் இவ்விளையாட்டு குறிப்பிடப்பட்டுள்ளது.ஏறுதழுவுதல் என்பது "மணமுடிக்கும் பொருட்டு இடபத்தைப் பிடித்தல்" எனத் தமிழ் அகராதி பொருள் தருகிறது. மேலும் முல்லை நிலத்தில் இது வழக்கில் இருந்தமையைக் குறித்து "ஆயர்கள் மத்தியில் நிலவிய மணவினைச் சடங்குகளுள் ஒன்றாக ஏறுதழுவுதல் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது" என்பர்.

எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்புக்
கலங்கினர் பலர்
அவருள் மலர்மலி புகழ் எழு
அலர் மலி மணிபுரை நிமிர் தோள் புனை,
எருத்தோடு அமிலிடைத் தோன்றினன் ( கலி – 102 – 108 )

என்ற பாடலடிகள் ஏறுதழுவல் நடக்கும் இடத்தைக் குறிப்பிடுகின்றன.மேலும் காளையை அடக்கும் வீரனையே மணமுடிக்கப் பெண்கள் விரும்புவதை

கொல்லேற்றுக் கோடஞ்சுவானை

மறுமையும்
புல்லாளே ஆயமகள் ( கலி 103: 63-64 )

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. இதன் வழி ஏறுதழுவுதல் வழக்கில் இருந்தமையை அறியலாகின்றது.

**குறும்பு விளையாட்டுகள் :**

தங்களுடைய மகிழ்ச்சியை மட்டுமே கருத்தில் கொண்டு விளையாடும் விளையாட்டுகளைக் குறும்பு விளையாட்டுகள் என்பர்.

மணற் சிற்றில் காலின் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டு ஓடி
நோ தக்க செய்யும் சிறுபட்டி ( கலி 51: 1-4 )

என்ற பாடலடிகள் தெருவில் சிறுமியர் கட்டி விளையாடும் மணல் வீட்டினை சிறுவர்கள் காலால் உதைத்தும் அச்சிறுமியர் பூமாலையை இழுத்தும் அறுத்தும் பந்தை பறித்துக் கொண்டு ஓடியும் வருந்தச் செய்ததை விளக்குகின்றன.

**சிறுதேர் :**

சங்ககாலத்தில் குழந்தைகள் நடை பயிலுவதற்கும் சிறுவர்கள் விளையாடுவதற்கும் சிறிய தேர் வடிவிலான விளையாட்டுப்பொருளினைப் பயன்படுத்தியுள்ளனர். “சிறுதேர் என்பது குழந்தைகள் விளையாடும் வண்டி” என்று தமிழ் அகராதி பொருள் தருகிறது. “சிறுவர்கள் மெல்ல மெல்ல நடக்கப் பழகும் காலங்களில் மூன்று கால்களையுடைய சிறுதேர்களை உருட்டி விளையாடினர்” என்பர்.

முற்றத்துக்
கால் வல் தேர் கையின் இயக்கி
( கலி 81 : 7-8 )

என்ற பாடலடிகள் வீட்டின் முன் அகன்ற முற்றத்தில் வலிமையான சக்கர வண்டிகளை கையால் உருட்டி விளையாடி மகிழ்ந்து விளையாடியுள்ளனர் என்பதனைத் தெரிவிக்கின்றன.

**மகளிர் விளையாட்டுகள் :**

சங்ககால மகளிர் ஓய்வு நேரங்களில் பல்வேறுவகையான விளையாட்டுகளை விளையாடியுள்ளனர். எதிரொலி கேட்டல், கண்புதைந்து ஒளிந்தாடல், கவண், கழங்கு, குரவை, சிறுசோறு, சிற்றில் செய்தல், செடிகொடி வளர்ப்பு, பறவை விலங்கு வளர்ப்பு, பிசி, தொடி விளையாட்டு போன்ற பல விளையாட்டுகளை மகளிர் விளையாடியுள்ளனர்.

**குரவை :**

குரவை என்பது ஒருவகையான கூத்து ஆகும்.இக்கூத்தினைப் பெண்கள் ஆடுவது மரபு.இதனை விளையாட்டாகவும் மேற்கொண்டுள்ளனர். குரவை என்பதற்கு “ ஒலி, கடல், கூத்து, கைகோர்த்தாடல், பெருஞ் சத்தம், மகளிர் சந்தோச ஒலி” எனத் தமிழ் அகராதி பொருள் தருகிறது.

குரவை தழீஇ யாம் ஆடக் குரவையுள்
கொண்டு நிலைபாடிக் காண் ( கலி 39 : 28-29 )

என்ற பாடலடிகள் வாயிலாக மகளிர் குரவை ஆடும்போது குரவைக் கூத்துக்கேற்ற பாடலை ஆடிப் பாடியுள்ளனர் என்பதை அறியலாகின்றது.

**சிறுசோறு ஆக்கல் :**

சிறுமிகள் மணல் வீடு கட்டி சின்னச் செப்புகளை வைத்துச் சோறாக்கி விளையாடுவது இவ்விளையாட்டு ஆகும்.தமிழ் அகராதி சிறுசோறு ஆக்கல் என்பதற்கு “மணற்சோறு, சித்திரான்னம்” எனப் பொருள் தருகிறது.

சிறு முத்தனைப் பேணிச் சிறுசோறு மடுத்து ( கலி 59 : 20 )

என்ற பாடலடி மகளிர் சிறுசோறு சமைத்து விளையாடியமையைக் குறிப்பிடுகின்றது.

**சிற்றில் செய்தல் :**

சிறுமியர் மணலில் சிறிய சிறிய வீடுகளைக் கட்டித் தம்முடைய கற்பனைக்கு ஏற்ப உருவாக்கி விளையாடுவர். சிற்றில் என்பதற்கு “ சிறு குடில், சிறு வீடு, சிறுமியர் கட்டி விளையாடும் மண் வீடு” என தமிழ் அகராதி பொருள் தருகிறது.

தெருவில் நாம் ஆடும்
மணற் சிற்றில் காலின் சிதையா
( கலி 51: 1-2 )

என்ற பாடலடிகள் தலைவி சிறுவயதில் சிறு வீடு கட்டி விளையாடிய போது தலைவன் அதனை அழித்தான் என்ற செய்தியைக் குறிப்பிடுகிறது.

**வள்ளை :**

சங்ககால மகளிர் விளையாட்டுகளுள் வள்ளை விளையாட்டும் ஒன்று. "வள்ளை என்பது உலக்கைப் பாட்டு, ஒரு கொடி" எனத் தமிழ்மொழி அகராதி குறிப்பிடுகிறது.

நாம் வள்ளை அகவுவம் வா இகுளை நாம்
வள்ளை அகவுவம் வா (கலி 42: 7-9)

என்ற பாடலடிகள் வள்ளை விளையாட்டைக் குறிப்பிட்டுள்ளன.

இருபாலர் விளையாட்டுகள் :

இருபாலர் விளையாட்டுகளாக அசதியாடல், அம்புலி அழைத்தல், அலவன் ஆட்டல், உலாவல், ஊசல், எண்ணி விளையாடல், சுண்ண விளையாட்டு, சூது, நீர் விளையாட்டு ஆகியன இருபாலர் விளையாடும் விளையாட்டுகள் எனலாம்.

**அசதியாடல் :**

அசதியாடல் என்பது தனித்தும் ஓரிருவரைத் துணையாகச் சேர்த்துக் கொண்டும் விளையாடும் விளையாட்டு ஆகும். அசதியாடல் என்பது "பரிகசித்தல், வேடிக்கை, வார்த்தை கூறுதல், சிரித்துப் பேசுதல்" என்று தமிழ் அகராதி சுட்டுகிறது.

வல்லுப் பலகை யெடுத்து நிறுத்தன்ன
கல்லாக் குறள கடும்பகல் வந்தெம்மை
இல்லத்து வாவவென மெய்கொளீஇ யெல்லாநின்
பெண்டி ருளர் மன்னோ கூறு ( கலி 94 : 13-16 )

என்ற பாடலடிகள் குறளனும் கூனியும் உரையாடும் அசதியாடல் விளையாட்டினை விளக்குகிறது.

**அம்புலி காட்டல் :**

ஆண், பெண் என்ற இருபால் குழந்தைகளிடமும் பெரியவர்கள் அம்புலி காட்டி விளையாடச் செய்வர். அம்புலி என்பது "பிள்ளைத் தமிழில் ஒரு உறுப்பு. சந்திரனைக் காட்டுதலைக் குறிக்கும்" என்பர்.

ஐய! திங்கட் குழவி! வருக ! என யான் நின்னை
அம்புலி காட்டல் இனிது ( கலி 80 : 18-19 )

என்ற பாடலடிகள் அம்புலி காட்டுதலைக் குறிக்கும்

**ஊசல் :**

இளம் பெண்கள் விளையாடும் விளையாட்டுகளில் ஊஞ்சல் முதன்மையானது. பெண்கள் மட்டுமல்லாமல் ஆண்களும் ஊஞ்சல் விளையாடியுள்ளனர்.

ஊசல் ஊர்ந்து ஆட ஒரு ஞான்று வந்தனை ( கலி 37 : 14 )
தண் தாழை வீழ் ஊசல் ( கலி 131 : 11 )

என்ற பாடலடிகள் ஊசல் விளையாட்டினைக் குறிப்பிடுகின்றன.

சுண்ண விளையாட்டு :

சுண்ணம் என்பது ஒருவகை வாசனைப் பொடி. பலரும் சேர்ந்து ஒருவர் மீது ஒருவர் சுண்ணப் பொடியைத் தூவி விளையாடுவதே இவ்விளையாட்டாகும்.

சுண்ண நீறு ஆடி (கலி 97: 10)

என்ற பாடலடி இவ்விளையாட்டினைச் சுட்டுகிறது.

**பந்தாட்டம் :**

பந்தாட்டம் ஆண், பெண் இருவருக்கும் இன்பம் தரக் கூடிய விளையாட்டாக அமைந்துள்ளது.இவ்விளையாட்டு வீட்டிற்கு வெளியிலும் முற்றத்திலும் மாடத்திலும் மணல் வெளியிலும் ஆடப்பட்டது.

கோதைப் பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்கச் செய்யும் சிறுபட்டி ( கலி 51 : 3-4 )

என்ற பாடலடிகளால் பந்து விளையாட்டினை அறிந்து கொள்ள இயலுகின்றது.

சங்க இலக்கியத்தில் மொத்தம் 37 விளையாட்டுகள் இருந்துள்ளன. அவற்றுள் சில விளையாட்டுகளை மட்டுமே நாம் கலித்தொகையில் காணமுடிகிறது. ஆடவர் விளையாட்டுகள் உடல்திறன் மற்றும் அறிவுத்திறன் சார்ந்த விளையாட்டுகளாக அமைகின்றன. மகளிர் வீட்டின் உள்ளேயும் வெளியேயும் விளையாடியுள்ளனர். சில விளையாட்டுகளை ஆண்களும் பெண்களும் விளையாடியுள்ளனர். இருபாலர் விளையாட்டுகளுள் பந்து ஊசல் ஆகியவற்றை பெருமளவு பெண்களே விளையாடியுள்ளனர் என்பதனை இதன்வழி அறியலாகின்றது.